- **சரியான விடையைத் தெரிவு செய்க.**

1) ஆட்சியுரிமை தந்தையிடம் இருந்து மகனுக்குக் கிடைத்தமைக்குப் பொருந்தாத சோடியாக அமைவது.

   i. பண்டுகாபயன் ⟶ முடசிவன்

   ii. காரந்தீசன் ⟶ துட்டகைமுனு

   iii. துட்டகைமுனு ⟶ சந்தாதிஸ்ஸ

   iv. வசபன் ⟶ வங்க நாசிகதிஸ்ஸ

2) அரச பாரம்பரியம் சகோதரனிடம் இருந்து இன்னொரு சகோதரனுக்கு கிடைக்கப் பெற்றமையைக் காட்டாத சோடி எது?

   i. வசபன் ⟶ வங்கநாசிகதிஸ்ஸ

   ii. துட்டகைமுனு் ⟶ சந்தாதிஸ்ஸ

   iii. சேனன் ⟶ 4ம் மகிந்தன்

   iv. 4ம் விஜயபாகு ⟶ 1ம் புவனேகபாகு

3) அரசியல் பலம் மத்திய மயப்படுத்தப்பட்ட பின்னர் நாட்டின் நிர்வாகி எவ்வாறு அழைக்கப்பட்டார்?

   1. பருமக 2. கமிக 3. குர்ஹபதி 4. மகாராஜா

4) அரசனின் நிர்வாகத்திற்கு உதவிய அரச அதிகாரிகளுள் தலைமை அமைச்சரைக் குறிக்கும் விடை.

   1. மபுறுமுகா 2. மஹமத 3. பதகு 4. நகரகுத்திக

5) புராதன மன்னர்கள் மக்கள் முன் தோற்றம் தர விரும்பிய எண்ணக்கருக்களை வெளிப்படுத்தும் விதங்கள் நிரல் A யிலும் அவற்றிற்கு உரிய மன்னர்கள் நிரல் B யிலும் தரப்பட்டுள்ளனர். இணைக்கும் போது கிடைக்கும் சரியான விடையாது?

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. நரேஸ்வர | A. மகாசேனன் |
| 2. காலிங்க சக்கரவர்த்தி | B நிஸ்ஸங்க மல்ல |
| 3. மின்னேரியா தெய்வம் | C 1ம் காசியப்பன் |
| 4. அலகபய மகாராஜா | D குட்டகண்ண அபய |

   1) ABCD 2. DBAC 3. BCDA 4.CBAD

1) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

i) பின்வரும் அரச அதிகாரிகள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

A. காசு அச்சிடும் பிரிவின் தலைவர்
B. பொருளாளர்
C. அமைச்சர்கள்
D. நகர கட்டட நிர்மாணி

ii) அரசன் ஒருவரின் கடமைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

iii) நாட்டின் நிர்வாகத்தைக் கட்டியெழுப்ப வசப மன்னன் ஆற்றிய பங்களிப்பினை 2 காரணிகளின் துணையுடன் விளக்குக.

iv) அரசியல் அதிகார வளர்ச்சிக்கு துட்டகைமுனு மன்னன் ஆற்றிய பங்களிப்பை விளக்குக.

2) i. 1ம் விஜயபாகு மன்னனுடன் தொடர்புபடுத்தி பின்வரும் விடயங்களைக் குறிப்பிடுக.

A. இளமைப் பெயர்
B. பாதுகாப்பு வழங்கியர்
C. எழுதப்பட்ட செப்பேடு

ii. 1ம் வியபாகு மன்னனின் அரசியல் பணிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

iii. பின்வரும் மன்னர்கள் ஆற்றிய சமயப் பணிகள் ஒன்று வீதம் விபரிக்குக.

A. துட்டகைமுனு
B வசபன்
C 1ம் விஜயபாகு

iv) நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப 1ம் விஜயபாகு மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக.